**an International CBSE Finger Print School**
**Coimbatore**

# இயல் 6.1

## உழவுப் பொங்கல்

**அ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. **அனைவரும் இன்பமுடன் வாழ்வதற்குத் தெம்பு தரும் தொழில் எது? உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?**

- அனைவரும் இன்பமுடன் வாழ்வதற்குத் தெம்பு தரும் தொழில் உழவுத்தொழில் ஆகும்
- எங்கும் யாவரும் இன்பமாய் வாழ்வதற்கு உழவுத்தொழில் பயன்படுகிறது. பயிர்கள் விளைவிப்பதால் செல்வம் சேரும்; உணவும் உடையும் கிடைக்கும்.

2. **பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?**

- பொருளில்லாதவரும் செல்வமுடையவரும் இணக்கமாய் வாழும் திருநாள் பொங்கல் நாள்.
- ஆகையால், ஏற்றம் தரும் ஏர்த்தொழிலின் பெருமையை உணர்ந்து அனைவரும் உழவுப் பொங்கலிட்டுப் பயிர்வளம் பெருக்குவோம்.

3. **நாமக்கல் வெ. இராமலிங்கனார் - ஆசிரியர் குறிப்பு எழுதுக.**

- நாமக்கல் மாவட்டம் மேகானூரில் பிறந்தார்.
- இவரின் பெற்றோர் வெங்கடராமன் பிள்ளை - மணியம்மாள்.
- இந்திய விடுதலை குறித்தும், காந்தியடிகள் குறித்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார். காந்தியக் கவிஞர் என்றும் போற்றப்படுகிறார்.
- இவர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக இருந்துள்ளார்.